# M7 இணையத்திலும் பிற இடங்களிலுமிருந்து தகவல்கள் பெறுதல்




குறிப்பாக நீங்கள் இணையத்தை இரண்டு மொழிகளிலும் பயன்படுத்த முடியுமாயின், அது ஒரு நல்ல தகவல்தரு சான்றாகும். இவ் வழியிலே சென்றால், அது மிகவும் எளிதானது:

- ஒரு நல்ல தேடல் பொறியைத் தேர்வு செய்யவும். எ.கா. கூகிள் (உள் நுழைய "www.google.com")
- முடிந்தவரை மிகச் சரியாக (இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நல்ல சொற்களில்) உங்கள் தலைப்புத் தொடர்பாக துல்லியமான திறப்புச் சொல்லாகக் கொடுங்கள். (எ.கா. சிங்கங்கள் தொடர்பான நீதிக்கதைகளை தேடுகிறீர்களாயின் "சிங்கம்", அல்லது "நீதிக்கதைகள்", அல்லது "துருக்கி பற்றியாயின் இஸ்தன்புல் படங்கள்" அல்லது "போர்த்துக்கல் விவசாயம்")
- உங்களுக்குப் போதிய இணையத் தளங்கள் கிடைக்கும். முதலில் அதில் விக்கிப்பீடியா உள்ளதா எனப் பார்க்கவும். விக்கிப்பீடியா பல மொழிகளில் கிடைக்கும் ஒரு நல்ல இணையக் கலைக்களஞ்சியம் ஆகும். (நீங்கள் www. wikipedia.com என உள்ளிடவும். பின்னர் தேடல் பெட்டியில் உங்கள் திறவுச் சொல்லை எழுதவும்.)
- நீங்கள் உங்கள் சொந்த மொழியில் வலைத்தளங்களில் தேடுதலும் அல்லது கூகுளில் உங்கள் மொழியில் தேடல் தொடரை தேடல்பொறியில் எழுதுவதும் இன்றியமையாதது. உங்கள் தேடல் சொற்கூறு சரியாக எழுத வேண்டும். உங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை என்றால், பெரும்பாலும் ஒரு மொழிபெயர்ப்புப் பொறி உதவலாம். எடுத்துக்காட்டாக. கூகுள் மொழிபெயர்ப்புப்பொறி நல்லதொன்றாகும் (https://translate .google.de)
- பல மொழிகளில் அங்கு குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான சிறப்புப் பக்கங்கள் உள்ளன (எ.கா. ஜேர்மன் மொழியில் www.blinde-kuh.de). உங்கள் மொழியிலும் கூட இது இருக்கிறதா என்பதை அறியவும்!
- பல தகவல்களால், நீங்கள் தேட வேண்டியதை எளிதாக மறந்தும் விடுவீர்கள் எனவே, எப் பக்கங்கள் (உரை, படங்கள், ஒலிக் கோப்புகள்) உங்கள் நோக்கங்களுக்குப் பயனுள்ளவை என்பதை நீங்கள் சரியாக எண்ணி அதை மட்டும் அச்சிடுக.
- இணையத்தில் நிறைய பிழையான பயன்பாடுகள் இடம்பெறுகின்றன என்பதையும் அறிந்துவைத்தல் மிக இன்றியமையாதது. பின்வரும் குறிப்புகளை எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும்: உங்கள் பெயர் முகவரியை அல்லது மின்னஞ்சல் முகவரியை வெளிப்படுத்த வேண்டாம். இதனூடாக காதற் தொடர்புகளிலோ நேர்காணல்களிலோ உட்படவேண்டாம். பெற்றோர் ஒப்புதல் இல்லாமல் எந்தப் பொருட்களையும் கொள்வனவு செய்ய வேண்டாம். ஐயத்துக்கிடமான எந்த ஒரு இணைப்பையும் அழுத்த வேண்டாம். ஐயமிருப்பின் உங்கள் பெற்றோருடன் அல்லது ஆசிரியருடன் கலந்து பேசவும்.

## குறிப்பு

இணையத்திற்கு நிகராக அல்லது மற்றும் மேலதிக இன்றியமையாத தகவல்கள் தரும் சான்றுகள் கூடுதலாக உள்ளன என்பதை மறக்க வேண்டாம். அவற்றுள் முதன்மையானவை பின்வருமாறு:




- ▶ நூலகங்கள் (இங்கே நீங்கள் பாடநூல்கள், பிற துறைசார் படைப்புகள், கலைக்களஞ்சியங்கள். உசாத்துணை நூல்கள், இதழ்கள் முதலியனவற்றைக் காணலாம்,)
- ▶ உங்கள் சூழலில் உள்ள விற்பன்னர்களுடன் உரையாடல்கள் (பெற்றோர், நண்பர்கள், துறைசார் விற்பன்னர்கள்.)
- ▶ "மின்னணு" ஊடான விற்பன்னர்களின் நேர்காணல்கள் (மின்னஞ்சல், தொலைபேசி, ஸ்கைப், குறுந்தகவல், முதலியனவற்றின் ஊடாக)